PUTHIYA THALAIMURAI FOUNDATION

(A People-based movement working for Youth Development, Rural Education & Healthcare - One of the Largest NGOs in India)

ISRB EXPO FORUM(TM)

Indian Small & Rural Business Exposition

(A Unit of Puthiya Thalaimurai Foundation)

(A National Initiative to Promote Small & Rural Businesses)

*Nadar Saraswathi College of Arts & Science, Theni*

**“ஏற்றுமதி தொழில் தொடங்குவதற்கு முதலில் பொருளை தேர்ந்து எடுக்க வேண்டும், பின்னர் சரியான திட்டமிடல் வேண்டும், சிறிய அளவில் ஏற்றுமதி தொழிலை தொடங்கி மெதுவாக விரிவுபடுத்த வேண்டும்”**

*A Report on*

National Workshop Series on Micro Entrepreneurship for Youth

# Seminar on Export Business Opportunities

## ஏற்றுமதி & இறக்குமதி தொழில் வாய்ப்புகள் - இரண்டு நாள் கருத்தரங்கம்

March 4 & 5 2023 | Time: 10.00 a.m. to 5.30 p.m.

Nadar Saraswathi College of Arts & Science, Vadapudupatti, Theni





திரு. பி.எஸ்.அசோகன், பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், தேனி மாவட்டம் மற்றும் தேனி மேலப்பேட்டை ஹிந்து நாடார்கள் உறவின்முறையின் தலைவர் முனைவர். டி.ராஜாமோகன் அவர்களும் குத்துவிளக்கேற்றி கருத்தரங்கத்தினை துவக்கி வைத்த காட்சி



சிறப்பு விருந்தினர்கள் மேடையில் வீற்றிருந்த காட்சி



கல்லூரியின் துணை முதல்வர், திருமதி. சுசீலா சங்கர் அவர்கள் வரவேற்புரையாற்றிய காட்சி



பார்வையாளர்கள் பதிவு செய்யும் காட்சி



புதிய தலைமுறை அறக்கட்டளையின், பொதுமேலாளர் - திட்டங்கள் ச.சுரேஷ் கண்னன், சிறப்புரையாற்றிய காட்சி

புதிய தலைமுறை அறக்கட்டளையின் ஐ.எஸ்.ஆர்.பி. எக்ஸ்போ மன்றம் மற்றும் தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறை நாடார் சரஸ்வதி கலை மற்றும் அறிவியில் கல்லூரியும் இணைந்து ஏற்றுமதி & இறக்குமதி தொழில் குறித்த இரண்டு நாள் கருத்தரங்கத்தினை மார்ச், 4 & 5, 2023 ஆகிய 2 நாட்கள் தேனி மாவட்டம் வடபுதுப்பட்டியில் உள்ள உறவின்முறை நாடார் சரஸ்வதி கலை மற்றும் அறிவியில் கல்லூரியில் நடத்தியது.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கி முதல் நிகழ்வாக கல்லூரியின் **துணை முதல்வர். திருமதி. சுசீலா சங்கர்** அவர்கள் விழாவிற்கு வருகை புரிந்த அனைவரையும் வரவேற்று வரவேற்புரை ஆற்றினார். சிறப்பு விருந்தினர்கள், பயிற்சியாளர், கல்லூரியின் முதல்வர், துணைமுதல்வர்கள் ஆகியோர் குத்துவிளக்கேற்றி கருத்தங்கத்தினை துவக்கி வைத்தனர்.

புதிய தலைமுறை அறக்கட்டளையின், **பொதுமேலாளர் - திட்டங்கள் ச.சுரேஷ் கண்னன்,** சிறப்புரையாற்றிய காட்சி பேசுகையில் நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர்களை அறிமுகம் செய்து வைத்து அதனைத் தொடர்ந்து அறக்கட்டளையின் திட்டங்கள் பணிகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். தொடர்ந்து பேசுகையில் இந்த நிகழ்ச்சி இங்கே சிறப்பாக நடைபெறுவதற்கு முழு ஒத்துழைப்பு கொடுத்து அனைத்து உதவிகளையும் மிகச்சிறப்பாக செய்து கொடுத்த நாடார் சரஸ்வதி கலை மற்றும் அறிவியில் கல்லூரி நிர்வாகத்திற்கும் மற்றும் மேடையிலே வீற்றிருக்கும் சிறப்புவிருந்தினர்கள் **தேனி மேலப்பேட்டை ஹிந்து நாடார்கள் உறவின்முறையின் தலைவர் முனைவர். டி.ராஜாமோகன்** அவர்களுக்கும் **துணைத் தலைவர் திரு. பி.பி. கணேஷ்** அவர்களுக்கும், **பொது செயலாளர் திரு. எம்.எம். ஆனந்தவேல்** அவர்களுக்கும். **பொருளாளர் திரு. எம். பழனியப்பன்** அவர்களுக்கும். இக்கல்லூரியின் **செயலாளர் திரு. கே.எஸ்.காசிபிரபு** அவர்களுக்கும், **இணை செயலாளர்கள்**



திரு. பி.எஸ்.அசோகன்



முனைவர். டி.ராஜாமோகன்



திரு. எம். பழனியப்பன்



திரு.கே.எஸ்.காசி பிரபு



முனைவர்.எஸ்.சித்ரா



திரு. எஸ். சிவராமன்

**திரு.எம். அருண்** அவர்களக்கும், இணை **திரு.ஏ.எஸ்.எஸ்.எஸ். சென்பகராஜன்** அவர்களுக்கும், **கல்லூரியின் முதல்வர் டாக்டர். எஸ். சித்ரா** அவர்களுக்கும் மற்றும் இக்கல்லூரியின் துணை முதல்வர்கள், கல்லூரி நிர்வாகத்தைச் சேர்ந்த அனைவருக்கும் அறக்கட்டளையின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டார். புதிய தலைமுறை அறக்கட்டளையின் சார்பில் **எஸ்.இளமாறன்**, Sr. Head, Projects மற்றும் **ஏ.ஆர்.ரமேஷ்கண்ணன்**, Project Manager – (VARHAP) Valliammai Ammal Rural Healthcare Assistance Project, & Vizhuthugal ஆகியோர் இந்த இரண்டு நாள் கருத்தரங்கத்தினை ஒருங்கிணைத்து சிறப்பாக நடத்தினார்கள்.

தலைமையுறை ஆற்றிய தேனி மேலப்பேட்டை ஹிந்து நாடார்கள் உறவின்முறையின் தலைவர் **முனைவர். டி.ராஜாமோகன்** பேசுகையில் இந்த இரண்டு நாள் ஏற்றுமதி தொழில் வாய்ப்புகள் குறித்த பயிற்சிபட்டறை தேனி போன்ற கிராமப்புற பகுதி மக்களுக்கு மிகவும் பயனுள்ள ஒரு நிகழ்ச்சி என்றும் எங்கள் கல்லூரி மாணவர்கள் வருங்காலத்தில் ஏற்றுமதி தொழிலில் ஈடபடுவதற்கான ஒரு களமாக உள்ளது என்று கூறினார். தேனி மாவட்டத்தில் ஏற்றுமதி செய்வதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கிறது. தேனி மக்கள் ஏற்றுமதியாளர்களாக மாறுவதற்கு இந்த நிகழ்ச்சி ஒரு படிக்கல்லாக இருக்கும் என்றும் கூறினார்.

தேனி நாடார் சரஸ்வதி கல்லூரியின் செயலாளர் **திரு.கே.எஸ்.காசி பிரபு** அவர்கள் பேசுகையில் நம் கல்லூரியில் நடைபெறும் ஏற்றுமதி தொழில் வாய்ப்புகள் கருத்தரங்கம் நமது கல்லூரி மாணவிகளுக்கு மட்டும் இன்றி தேனி மாவட்ட மக்களுக்கு ஒரு பயனுள்ள நிகழ்ச்சி என்று கூறினார். மேலும் பேசுகையில் தேனி மாவட்டத்தில் திராட்சை, ஏலக்காய், பருத்தி போன்ற பொருட்கள் விளைச்சல் அதிகம் உள்ளது. இந்த தலைமுறையினருக்கு ஏற்றுமதி செய்வது என்பது ஒரு பெரிய வாய்ப்பு இத்தகைய வாய்ப்பினை நமக்கு வழங்கிய புதிய தலைமுறை அறக்கட்டளைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின் முறையின் உபத்தலைவர் திரு.எம்.எம். கணேஷ், பொதுச்செயலாளர் திரு.எம்.எம். ஆனந்தவேல் மற்றும் பொருளாளர் திரு.எம்.பழனியப்பன் ஆகியோர் முன்னிலையுரை ஆற்றினார்கள். கல்லூரியின் இணைச்செயலாளர்கள் திரு.ஏ.எஸ்.எஸ்.எஸ். செண்பகராஜன், திரு எம்.அருண், ஆட்சிமன்றக்குழு உறுப்பினர்கள் திரு.கே.கே.ஜெயராம், மற்றும் திரு.ஏ.எஸ்.ஜீவகன், கல்லூரியின் முதல்வர் முனைவர்.எஸ்.சித்ரா மற்றும் துணை முதல்வர்கள் முனைவர். ஏ.கோமதி, மற்றும் முனைவர்.ஏ.சரண்யா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

சிறப்பு விருந்தினர் **திரு. பி.எஸ்.அசோகன்.** பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், தேனி மாவட்டம் பேசுகையில் நீங்கள் ஏற்றுமதியாளராக வேண்டுமானால் முதலில் என்ன பொருளை தேர்வு செய்ய வேண்டும், பின்னர் அந்த பொருள் எந்த நாடுகளுக்கு அதிகம் ஏற்றுமதி ஆகிறது என்பது போன்ற தகவல்களை சேகரிக்க வேண்டும் என்றும் கூறினார். மேலும் பேசுகையில் உங்களைப் போன்ற தொழில்முனைவோர்களுக்கு பல்வேறு நலதிட்டங்கள் மாவட்ட தொழில் மையத்தில் இருக்கிறது என்றும் தொழில் மையத்தின் பணிகள், திட்டங்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.





இந்த இரண்டு நாள் கருத்தரங்கில் திரு. எஸ். சிவராமன், Advocate, Consultant & Trainer,. Export – Import / Customs / MSME Chennai அவர்கள் பேசுகையில் ஏற்றுமதி வர்த்தக வாய்ப்புள்ள பொருட்களையும் நாடுகளையும் கண்டறியும் முறைகள், ஏற்றுமதி செய்வதற்கு என்ன என்ன பொருட்கள் எந்த நாடுகளுக்கு அதிகம் ஏற்றுமதி ஆகிறது போன்ற தகவல்களை தெரிந்து கொள்ள https://exportpotential.intracen.org/ என்ற இணையதளத்தின் மூலம் கண்டுபிடிக்கும் வழிமுறைகளை தெளிவாக எடுத்துரைத்தார். ஏற்றுமதி தொழில் தொடங்குவதற்கு முதலில் பொருளை தேர்ந்து எடுக்க வேண்டும், பின்னர் சரியான திட்டமிடல் வேண்டும், சிறிய அளவில் ஏற்றுமதி தொழிலை தொடங்கி மெதுவாக விரிவுபடுத்த வேண்டும் என்று கூறினார்.

> **“வர்த்தகம் செய்வதற்க்கு மொழி முக்கியமல்ல, மொழி தெரியாவிட்டால் ஏற்றுமதியில் வெற்றி பெற முடியாது என்ற எண்ணம் நிறைய மக்களிடம் உள்ளது அந்த மனநிலை மாற வேண்டும்”**

பொருளுக்கு விலை நிர்ணயம் செய்யும் வழிமுறைகள், பொருட்களுக்கு காப்பீடு செய்யும் வழிமுறைகள் குறித்தும் எடுத்துரைத்தார். இறக்குமதியாளரை அடையாளும் காணும் வழிமுறைகள், ஏற்றுமதி சந்தை வாய்ப்புகள் அதிகம் உள்ள நாடுகள், நிறுவனத்தை பதிவு செய்யும் வழிமுறைகள், ஏற்றுமதிக்கு தேவையான ஆவணங்களை தயார் செய்யும் வழிமுறைகள் மற்றும் Export & Import Promotion Council இன் பணிகள் மற்றும் அதில் உறுப்பினராகும் வழிமுறைகள், அதன் மூலம் கிடைக்கும் பயன்கள், பொருட்களை வெளிநாடுகளுக்கு கப்பல் மற்றும் விமானம் மூலம் அனுப்பி வைக்கும் வழிமுறைகள் குறித்தும் விரிவான தகவல்களை எடுத்துரைத்தார். வர்த்தகம் செய்வதற்க்கு மொழி முக்கியமல்ல, மொழி தெரியாவிட்டால் ஏற்றுமதியில் வெற்றி பெற முடியாது என்ற எண்ணம் நிறைய மக்களிடம் உள்ளது அந்த மனநிலை மாற வேண்டும் என்றும் கூறினார்.

மேலும் பல்வேறு இணையதளங்கள் – ஏற்றுமதி & இறக்குமதி குறித்த சர்வதேச வர்த்தகத் தகவல்கள் / புள்ளிவிவரங்களை www.trademap.org, www.commerce.gov.in, போன்ற இணையதளங்களின் மூலம் தெரிந்து கொள்ளவது எப்படி என்றும் விளக்கமாக எடுத்துரைத்தார். மேலும் பல்வேறு ஏற்றுமதி தொடர்பான இணையதளங்கள் www.eximmitra.in www.dgft.gov.in, www.agmarket.gov.in www.enam.gov.in/web www.tradestat.commerce.gov.in www.fieo.org, www.cogoport.com, www.tradingeconomics.com போன்றவற்றில் உள்ள தகவல்கள் குறித்தும் கூறினார்.

முதல்நாள் நிகழ்வில் சிறப்பு விருந்தினர் **திரு.எஸ்.வசந்தன்,** Chief Executive Officer, EDI-Periyakulam Horti Business Incubation Fourm, Horticulture College and Research Institute, Periyakulam



**திரு.எஸ்.வசந்தன், அவர்கள் சிறப்புரையாற்றிய காட்சி**

அவர்கள் பேசுகையில் முருங்கையிலிருந்து முருங்கைக் காய், முருங்கை இலை, முருங்கை விதை ஆகிய பொருட்கள் கிடைக்கின்றன. உலகின் பல நாடுகளுக்கு முருங்கை இலைப் பொடி அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. உலக வர்த்தகத்தின் முருங்கை இலையின் தேவை பற்றியும் அதன் வளர்ச்சி பற்றியும், முருங்கை இலை ஏற்றுமதி செய்யப்படும் நாடுகளில் அதன் முக்கியத்துவம் பற்றியும், முருங்கை சாகுபடி பற்றியும், பராமரிப்பு பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். மேலும் முருங்கை மதிப்பூக்கூட்டுப்பொருட்கள் பற்றியும் மேலும் ஏதேனும் விவரங்கள் தேவைப்பட்டால் என்னை அணுகலாம் என்றும் நான் உதவத் தயாராக இருப்பதாகவும் கூறினார்.

மேலும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அருப்புக்கோட்டையைச் சேர்ந்த மு. சித்தரதுல் முந்தனா, விஙிகி இறுதி ஆண்டு படிக்கும் மாணவி கூறுகையில் தான் கலந்து கொள்ளும் முதல் தொழில் சார்ந்த கருத்தரங்கம் இது தான் என்றும் ஏற்றுமதி தொழில் குறித்து எதுவும்



தெரியாத நிலையில் கலந்து கொண்ட எனக்கு இக்கருத்தரங்கத்தின் மூலம் ஏற்றுமதி தொழில் குறித்து – நிறுவனம் பதிவு செய்யும் முறைகள், மிணி சிஷீபீமீ எடுக்கும் வழிமுறைகள், பொருட்களை தேர்ந்தெடுக்கும் வழிமுறைகள் என அனைத்து தகவல்களையும் தெரிந்து கொண்டேன். பயிற்சியாளர் திரு. சிவராமன் மிகத்தெளிவாக அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் பொறுமையாக எங்கள் அனைவரின் கேள்விகளுக்கு பதில் அளித்த விதம் மிகச்சிறப்பு. இக்கருத்தரங்கம் மூலம் எனது படிப்பை முடித்தவுடன் ஏற்றுமதி தொழிலை தொடங்க வேண்டும் என்ற உத்வேகம் என்னுள் ஏற்பட்டுள்ளது என்றும் கூறினார்.

தஞ்சாவுரைச் சேர்ந்த டாக்டர். ஆண்டனி தாஸ் கூறுகையில் இது போன்ற கருத்தரங்கத்தினை ஏற்பாடு செய்த புதிய தலைமுறை அறக்கட்டளைக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். இக்கருத்தரங்கத்தில் கலந்து கொண்டதன் மூலம் ஏற்றுமதிக்கு பொருட்களை தேர்ந்தெடுப்பது குறித்து



ஒரு தெளிவான வழிகாட்டுதல் கிடைப்பெற்றேன். மேலும் இறக்குமதியாளரை நாமே இணையதளம் மூலம் கண்டுபிடிக்கும் வழிமுறைகளை தெளிவாக பயிற்சியாளர் சிவராமன் அவர்கள் எடுத்துரைத்தார்கள் என்றும் கூறினார்.

இக்கருத்தரங்கில் தஞ்சாவூர், திண்டுக்கல், தேனி, மதுரை, சென்னை, கன்னியாகுமரி, நாமக்கல், கிருஷ்ணகிரி, விருதுநகர், திருவள்ளூர், மயிலாடுதுறை, திருப்பூர், தர்மபுரி, விழுப்புரம், கடலூர், கோயம்புத்தூர், வேலூர் போன்ற ஊர்களில் இருந்து 130க்கும் மேற்பட்ட சுயதொழில் முனைவோர்கள் கலந்து கொண்டனர்.

இரண்டாம் நாள் 6.3.2023 நிகழ்வில் பார்வையாளர்களுக்கு சிறுதொழில்கள் குறித்த வினாடி வினா போட்டியினை நாடார் சரஸ்வதி கல்லூரி மாணவிகள் நடத்தினர். இப்போட்டியில் பார்வையாளர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு கேள்விகளுக்கு பதில் கூறினர். சரியாக பதில் கூறியவர்களுக்கு ஒரு சிறிய பரிசும் அறக்கட்டளை சார்பாக வழங்கப்பட்டது. மாலை 4.30 மணியளவில் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களுக்கு பங்கேற்புக்கான சான்றிதழும், ஐ.எஸ்.ஆர்.பி. எக்ஸ்போ மன்றத்தின் உறுப்பினர் அட்டையும் வழங்கப்பட்டது.

## National Workshop Series on Micro Entrepreneurship for Youth

# Seminar on Export Business Opportunities

### ஏற்றுமதி & இறக்குமதி தொழில் வாய்ப்புகள் - இரண்டு நாள் கருத்தரங்கம்

**இரண்டு நாள் கருத்தரங்கத்தின் சில புகைப்படங்கள் உங்கள் பார்வைக்கு**

















National Workshop Series on Micro Entrepreneurship for Youth

# Seminar on Export Business Opportunities

## ஏற்றுமதி & இறக்குமதி தொழில் வாய்ப்புகள் - இரண்டு நாள் கருத்தரங்கம்

**இரண்டு நாள் கருத்தரங்கத்தின் சில புகைப்படங்கள் உங்கள் பார்வைக்கு**



























*ISRB Expo Forum (A Unit of Puthiya Thalaimurai Foundation)*
*No: 24, G.N. Chetty Road, T.Nagar, Chennai - 600 017 | Email: info@isrbexpo.org*
*Mobile: 8754417338, 8754417308, 8754417500 | www.isrbexpo.org*